**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 166/2021** **நாள்.27.06.2024**

2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 27 நாள் வாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமால் | தொழில் | |
| த. பெ./க.பெ. | அருணாச்சலம் | சாதி | |
| கிராமம் | களையூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 77 |

**வ.சா.2**

**குறுக்கு விசாரணை**

I. நான் ஊராட்சி மன்ற தலைவராக 1996 முதல் 2001 வரை இருந்தேன். சாட்சி அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி வெங்கடேசன் அழைத்து வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் . நான் 11 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி வழக்கு சொத்து பக்கத்தில் எனது சொத்துக்கள் எதுவும் இல்லை. அர்ஜுனகவுண்டருக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் , பட்டா எண் தெரியாது. ஜக்குபந்தி தெரியும். 1 ஏக்கருக்கான ஜக்குபந்தி பாதைக்கு தெற்கு , ராமசாமி வகையறாவிற்கு மேற்கு, வடக்கே பாதை, கிழக்கு நாராயணசாமி நிலம். வேறு சொத்துக்களுக்கும் ஜக்குபந்தி தெரியும், பட்டா எண், சர்வே எண் தெரியாது. அர்ஜுனகவுண்டரின் பூர்வீக சொத்திற்கான ஆவணங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் இல்ல. வருவாய் ஆவணம் எதுவும் பார்த்தில்லை. அர்ஜுனகவுண்டருக்கு வாய்மொழியாக பாகம் பிரித்த போது நான் உடன் இருந்தேன். வெங்கடேசனுக்கு திண்டிவனத்தில் வீடு உள்ளது. அந்த வீடு பாகம் பிரிப்பதற்கு முன்பு கட்டப்பட்டதா அல்லது பாகம் பிரித்த பிறகு கட்டப்பட்டதா என்றால் பாகத்திற்கு பிறகு தான் வீடு கட்டினார். அதே போல் கிருஷ்ணகவுண்டர் பாகம் பிரித்த பிறகு தான் வீடு கட்டினார். பொதுபாகத்தில் கட்டினார். அர்ஜுனகவுண்டருக்கு வீடு எந்த சர்வே எண் 16/7 ல் 8 ஏக்கர் 56 சென்ட் இருந்தது . அதற்கான ஆவணங்கள் நீங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் அது நத்தம்புறம்போக்கு ஆகும். இவர்கள் இருவரும் பாகம் பிரித்த பிறகு பட்டா கிருஷ்ணகவுண்டர் பெயருக்கு கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அவர் அங்கேயே இருந்ததால் அவர் பெயருக்கு கொடுக்கப்பட்டது.

II. பட்டா கொடுத்தது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அரசாங்கத்தில் கிருஷ்ணகவுண்டருக்கு பட்டா கொடுத்த சமயத்தில் ஊரில் பலருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். நீங்கள் ஊராட்சி மன்ற தலைவராக இருந்த போது ஊரில் இருக்கும் வீடுகளுக்கு நீங்கள் தான் வீட்டு வரி ரசீதும் மற்றும் குடிநீர் ரசீதிலும் கையெழுத்து போட்டு கொடுப்பீர்கள் என்று சொன்னால் சரிதான். **என்னிடம் காட்டப்படும் கிருஷ்ணகவுண்டரின் வீட்டு ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பி.சா.ஆ.1/ வா.சா.2 மற்றும் பி.சா.ஆ-2/வா.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொதுவாக இருந்த குடிசை வீட்டிற்கு கொடுத்தேன்.** பொதுவாக என்று குறிப்பிட்டு இருந்தீர்களா என்றால் இல்லை. பாக பத்திரம் எழுதிய போது நீங்கள் உடன் சென்றிர்களா சாட்சி கையொப்பம் செய்தீர்களா என்றால் இல்லை. பாக பத்திரம் எழுதிய விவரம் வெங்கடேசன் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். பாகபிரிவினைக்கு பின்னிட்டு பட்டா கொடுத்த இடத்தில் வீடு கட்டியும் மீதி இடத்தில் குப்பை கொட்டி வருகிறார் என்றால் சரிதான். நானும் , வாதியும் ஒன்றாக படித்தாக கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுடன் ஒன்றாக படித்தவர் என்பதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இருவரும் வேண்டியவர் தான். அவ்வாறு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு சொத்து விவரமும், குடும்ப விவரமும் தெரியாது என்றாலும் வாதிக்கு ஆதரவாகவும், ஆர்வத்துடனும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.